## APPEAL UNDER RIGHT TO INFORMATION ACT, 2005

**தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(1)–ன் படி**
**தகவல் கோரும் மேல்முறையீடு.**

6(1)

அனுப்புதல்

ஆர்.ராஜா,
த/பெ.ரத்தினம்,
மேற்கு தெரு,
சின்னகாப்பாங்குளம் கிராமம்,
பெரியகாப்பாங்குளம் அஞ்சல்,
விருத்தாசலம் வட்டம்.
செல். 94984 30755.

பெறுதல்

மேல்முறையீடு அதிகாரி அவர்கள் – **RIGHT TO INFORMATION ACT,**
(Appeal Authority under RTI Act),
பொது மேலாளர் அவர்கள்,
இந்திய மின் கட்டுமானம் (Power Grid),
கார்ப்பரேஷன் லிமிடெட்,
F-40, Jawaharlala Nehru Salai,
Block - 25,
Neyveli Township.

ஐயா

1. விருத்தாசலம் வட்டம், சின்னகாப்பாங்குளம் கிராமத்தில் எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது. அதில் காலம் காலமாக முந்திரி, கரும்பு, மணிலா, நெல், எள் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்து விவாசயம் செய்து வந்தேன். இறுதியாக கரும்பு பயிர் செய்து விவசாயம் செய்து வந்தேன். இறுதியாக கரும்பு பயிர் செய்து வந்தேன். அப்போது அதிகாரிகள் கரும்பினை வெட்டி இடத்தை சுத்தப்படுத்திக் கொடுத்தால் மற்றவர்களுக்கு வழங்கும் தொகையைவிட அதிகமாக தருவதாக உறுதி

அளித்தனர். நானும் கரும்பு வெட்டி சுத்தம் செய்து கொடுத்தேன். ஆனால் எனக்கு மற்றவர்களை விட மிகவும் குறைவாக பணம் கொடுத்துள்ளார்கள். இந்நிலையில் எனக்கு சொந்தமான நிலத்தினை மின் அழுத்த கோபுரம் 400 KV அமைப்பதற்காக எனது நிலத்தில் 22 மிட்டர் அளவிற்கு எடுத்துக்கொண்டார்கள். மின் அழுத்த கோபுரத்தின் உயரம் சுமார் 186 அடி ஆகும். அதில் 24 ஒயர்கள் செல்கின்றது. ஆனால் எனக்கு மிகவும் குறைவான தொகையை வழங்கியுள்ளார்கள். எனக்கும் மற்றவர்களுக்கு வழங்கிய தொகையைப் போல் எனக்கு வழங்கப்படுமா ? கூடுதல் தொகை எப்போது எனக்கு கிடைக்கும் என்ற தகவல் தேவை.

2. தங்கம், த/பெ.முத்துகுமரன் அவர்களுக்கு 3வது மின்னழுத்த கோபுரத்திற்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் என்ற தகவல் தேவை.
3. சுப்பிரமணியன், கொல்லிருப்பு என்பவருக்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் என்ற தகவல் தேவை.
4. செம்புலிங்கம், த/பெ.சக்கரை அவர்களுக்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் என்ற தகவல் தேவை.
5. மாயகிருஷ்ணன் என்பவருக்கு எவ்வளவு தொகை வழங்கினீர்கள் மற்றும் எத்தனை முந்திரி மரங்களை வெட்டினீர்கள் என்ற தகவல் தேவை.
6. செந்தில், மின்பொறியாளர் எழுதப்படாத பவர் கிரிட் பேப்பரில் கையெழுத்து வாங்கியுள்ளார். எந்த விபரமும் எழுதப்படாமல் கையெழுத்து பெறலாமா? எழுதப்படாமல் என்னிடம் வாங்கிய வெற்று பவர் கிரிட் சிலிப்பினை கேட்டதற்கு தற்போது பதவியில் இருக்கும் தமிழ்வாணன் என்பவர் போலீசை வைத்து நான் வேலையை செய்வேன் என்று கூறியது சரியா என்ற தகவல் தேவை. இது குறித்து சப் கலெக்டரிடம் 21.01.2020ல் மனு கொடுத்துள்ளேன். எழுதப்படாமல் என்னிடம் கையெழுத்து பெற்றவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற தகவல் தேவை.
7. எனது மனுவை மீண்டும் மறு ஆய்வு செய்து என் நிலத்திற்கு அருகில உள்ளவர்களுக்கு வழங்கிய தொகையை போல் எனக்கு கூடுதல் தொகை வழங்கப்படுமா என்ற தகவல் தேவை.
8. என் நிலத்திற்கு மேல் மின்னழுத்த கோபுரம் செல்வதால் அடிக்கடி மின் மோட்டார் பழுது ஏற்பட்டு விவசாயம் செய்ய முடியாமல் நஷ்டம் அடைகிறேன். அதனால் நான் வேறு இடத்திற்கு போர் போடுவதற்கு நஷ்டயீட்டுத் தொகை வழங்கப்படுமா என்ற தகவல் தேவை.
9. முறைகேடாக பணம் வழங்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற தகவல் தேவை.
10. என்னுடைய நிலத்தை பற்றுகை செய்த வகையில் பிறப்பிக்கப்பட்ட L.A Award

Copy-ன் நகல் தேவை.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் நான் 05.06.2020 அன்று தங்களுக்கு அனுப்பிய மேல் முறையீட்டு மனு 08.06.2020 அன்று தங்களிடம் வந்து அடைந்து 30 நாட்கள் (30 Days) மேல் ஆகியும் இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை. எனவே அதிவிரைவாக தகவல் தருமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கோரிய தகவல்களை தகவல் அறியும் உரிமைச்சட்ட வரையரைப்படி எனக்கு உடன் வழங்க கோருகிறேன்.

மேலும் மேற்படி தகவல் பெறும் கட்டணமாக ரூ20/-க்கான நீதிமன்ற வில்லையை இத்துடன் ஒட்டியுள்ளேன். கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் அதனை செலுத்தவும் சம்மதிக்கிறேன்.

நன்றி

இடம் : நெய்வேலி
தேதி : 10.07.2020

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
R Raja
(ஆர்.ராஜா)